**பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் எரிசக்தி வினைத்திறன் முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (கட்டம் -1) - 2023**

---

பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் எரிசக்தி வினைத்திறன் முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் (கட்டம் -1) 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை மின்சார சபைக்கும் (CEB) ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ADB) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 நவம்பர் 20 ஆம் திகதிய எஸ்ஆர்ஜ 47037 ஆம் இலக்க செயற்திட்ட உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரையின் 2.09 (அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வெண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

நிகழ்ச்சித்திட்டத்தின் வசதியளிப்பு நிர்வாக கைநூலின் பிரகாரம், மின்சக்தி அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் இலங்கை மின்சார சபை நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. துாய வலு உற்பத்தி, முறைமை வினைத்திறன் மற்றும் உண்மைத்தன்மையை முன்னேற்றுவதே நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோளாகும். நிகழ்ச்சித்திட்டதின் நடவடிக்கைகள் அபிவிருத்தி செய்யப்பட்ட நீர் மின்வலு உருவாக்கம், உபமின்நிலையத்திற்கு இணைக்கப்பட்டவை, உயர்த்தப்பட்ட பரிமாற்ற உட்கட்டமைப்பு இயலளவு, முனனேற்றப்பட்ட வினைத்திறனான நடுத்தர வோல்டேச் வலையமைப்பு முன்னேற்றப்பட்ட வினைத்திறனான மின்வலுவுக்கான பக்க முகாமைத்துவ கேள்வி மற்றும் வழங்கப்பட்ட இயலளவு அபிவிருத்தி ஆதரவு போன்ந ஐந்து கூறுகளின கீழ் நிகழ்ச்சித்திட்டத்தின் நடவடிக்கைகள் அமுலாக்கப்படுகின்றன. வசதியளிப்பு நிர்வாக கைநூலின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 28,515.03 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 220 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 23,330.48 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 180 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஏஜென்ஸ் பிரன்சியஸ் டி அபிவிருத்தியால் (AFD) நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ரூபா 5,184.55 மில்லியன் தொகை இலங்கை மின்சார சபையால் நிதியளிக்கப்பட வேண்டுமென எதிர்பாரர்க்கப்பட்டது.

நிகழ்ச்சித்திட்டம் அதன் செயற்பாடுகளினை 2014 யூலையில் ஆரம்பித்திருந்ததுடன் 2019 செப்தெம்பர் 30 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. எவ்வாறாயினும், நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2024 யூலை 13 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

என்னனுடைய அறிக்கையின் அட்டவணை 2.1 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் அட்டவணை 2.1 இல் விபரிக்கப்பட்ட விடயங்கள் மீது என்னுடைய அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்பட்டுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல | கணக்கீட்டுக் குறைபாடுகள் / கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | எந்தவித மீளளிப்புகளும் பெறாமல் AFD (ஏஜென்ஸ் பிரன்சியஸ் டி அபிவிருத்தி முகவர்) இற்கு ரூபா 341.1 மில்லியன் செலவு வைக்கப்பட்டிருந்தது. இந்த பதிவு கட்டுநிதி ஊடாக உயர்த்தப்பட்ட பரிமாற்ற உட்கட்டமைப்பு ஒப்பந்தத்தின் பிடிகாசு விடுவித்தலில் மற்றும் கட்டம் II இன் ஒப்பந்த கொடுப்பனவு என்பவற்றில் அனுமதிக்கப்பட்டிருந்தது. இதன் விளைவால் AFD பங்களிப்பு அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் CEB பங்களிப்பு அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் பொதுப் பேரேட்டிற்கு தாக்கத்தை ஏற்படுத்தாதிருந்தது நிதிக் கூற்றில் தவறாக சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. இது செயற்திட்ட பேரேட்டுக் கணக்கில் கரியாக பதியப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அழுத்தம் காரணமாக இந்த தொகை செயற்திட்ட நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் பொது AFD பங்களிப்பிற்கு தவறாக சேர்க்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும் இது வெறுமனே தறவாக சமர்ப்பித்தமையால் செயற்திட்ட கணக்குகளின் பேரேட்டுக் கணக்கினை இது பாதித்திருக்கவில்லை. அனுமதிக்கப்படுமாயின் இது சீராக்கப்பட்ட மீளச் சமர்ப்பிக்கப்படும். | செயற்திட்ட நிதிக்கூற்றில் யுகுனு பங்களிப்பு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது உயர்த்தப்பட்ட பரிமாற்ற உட்கட்டமைப்பு இயலள செயற் திட்டத்தின் விசேட வெளிநாட்டு நாணய வங்கி கணக்கிலிருந்து ரூபா 206.3 மில்லியன் தொகையான பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் சக்தி வினைத்திறன் முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (கட்டம் II) இன் ஒப்பந்தகாரருக்கு செய்யப்பட்ட கொடுபபனவு 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏனைய பிரிவுகளின் நடைபெறும் வேலைகளில் உள்ளடக்கப் | செயற்திட்டத்தின் பொதுப் பேரேட்டிற்கு தாக்கத்தை ஏற்படுத்தாதிருந்தது நிதிக் கூற்றில் தவறாக சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. இது செயற்திட்ட பேரேட்டுக் கணக்கில் கரியாக பதியப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அழுத்தம் காரணமாக இந்த தொகை செயற்திட்ட நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் பொது AFD பங்களிப்பிற்கு தவறாக சேர்க்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும் இது வெறுமனே தறவாக சமர்ப்பித்தமையால் செயற்திட்ட கணக்குகளின் பேரேட்டுக் | விசேட வெளிநாட்டு வங்கிக் கணக்கின் ஊடாக செய்யப்பட்ட சகல கொடுப்பனவுகளும் செயற்திட்டத்தின் நிதிக் கூற்றினை தயாரிக்கும் போது உரிய பேரேட்டுக் கணக்கில் பதியப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பட்டிருக்கவில்லை. இதன் விளைவால், நடைபெறும் வேலைகளின் மீதி அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | கணக்கினை இது பாதித்திருக்கவில்லை. அனுமதிக்கப்படுமாயின் இது சீராக்கப்பட்டு மீளச் சமர்ப்பிக்கப்படும். | |
| (இ) | காசுப் பாய்ச்சல் கூற்றை தயாரிக்கும் பொது மீளாய்வாண்டிற்காக ரூபா 34.6 மில்லியன் தொகையான பெறுமானத்தேய்வு காசல்லாத விடயமாக எடுக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 175.2 மில்லியன் தொகையான திரண்ட பெறுமானத்தேய்வு காசல்லாத விடயமாக எடுக்கப்பட்டிருந்தது. இதன் விளைவால் காசுப்பாய்ச்சல் கூற்றில் பெறுமானத்தேய்வு தொகை ரூபா 140.5 மில்லியனால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | அனுமதிக்கப்படுமாயின் இது சீராக்கப்பட்ட மீளச் சமர்ப்பிக்கப்படும். | ஆண்டின் சம்பந்தமான பெறுமானத்தேய்வு தொகை காசுப் பாய்ச்சல் கூற்றிற்கு எடுக்கப்பட வெண்டும். |
| (ஈ) | CEB இன் பங்களிப்பின் ரூபா 3,477 மில்லியன் தொகையான இறுதி மீதி புறம்பான கொடுக்கல் வாங்கலாக காட்டுவதனால் இலங்கை மின்சார சபை பங்களிப்பிற்காக புறம்பான பேரேட்டு கணக்கினை பேணாமல் நிதிக்கூற்றின் குறிப்பு இல. 12 இன் கணிப்பீட்டு அடிப்படையில் நிதி நிலைமை கூற்றிற்கு எடுக்கப்பட்டிருந்தது. ஆகவே, CEB இடமிரந்தான பெறுகைகள் காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 528.5 மில்லியன் கொடுப்பனவாக காட்ப்பட்டிருந்தது. | CEB கணக்கீட்டு முறைமை கிளையின் கீழ் GL பேணப் படுகின்றமையால் CEB பங்களிப்பிற்காக புறம்பான பேரேடு பேணுவதற்கு எப்படி சந்தேகமாக உள்ளது. நிறுவனத்தினுடைய நிதிக் கூற்றக்கள் முடிவுறுத்த முன்னர் தெளிவாக்குவதற்கு சகல அளவீடுகளும் எடுத்திரந்ததுடன் பிரவின் நடைமுறைக் கணக்கு சமப்படுத்தப்பட்டிருந்தது. CEB பங்களிப்பின் கலவையின் விரிவான கணிப்பீடு குறிப்பு இல. 12 அவசியமாயின் மேலும் வழங்க முடியும். | CEB இன் பங்களிப்பிற்காக புறம்பான பேரேட்டு கணக்கு பேணப்பட வேண்டும். |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்**

| இல | கூறு /உபகூறுகள் | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | கணக்காய்வு அவதானிப்பு | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | | எதிர்பார்க்கப் பட்ட பௌதீக செயலாற்றல் | அடையப்பட்ட செயலாற்றல் | | |
| | | சதவீதம் | சதவீதம் | | |
| (அ) | பகுதி 01- நீர்மின்சார உருவாக்கல் அபிவிருத்தி மற்றும் உப நிலையத்திற்கு இணைக்கப்பட்டது மொறக்கொல்ல நீர் மின் பொறியில் நிர்மாணம் | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| (i) Lot A1- தயார்ப்படுத்தல் வேலைகள் | 100 % | 77.7% | ஒப்பந்தம் 2018 ஏப்ரல் 24 இல் வழங்கப்பட்டு 2020 மே 06 அளவில் ஆரம்பத்தில் பூர்த்தியாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. நான்கு தடவைகள் கால நீடிப்பு (EOT) வழங்கப் பட்டிருந்ததுடன் கால நீடிப்புடன் கடைசி பூர்த்தியாக்கல் திகதி 2024 யூலை 13 ஆக உள்ளது.<br><br>ஆரம்ப பூர்த்தியாக்கல் திகதியிலிருந்து மூன்று ஆண்டுகளிற்கு மேல் கடந்திருந்த போதிலும் செயற்திட்டமானது 2023 திசெம்பர் 31 வரையும் பூர்த்தியாக்கப் பட்டிருக்காததுடன் ஒப்பந்தகாரரின் தாமதம் காரணமாக குறிப்பிடத் தக்களவு தாமதம் நிலவியது.<br><br>மேலும், ADB மிசன் அறிக்கை பிரகாரம், 2023 ஒக்தோபர் 30 இல் உள்ளவாறு ஒப்பந்தத்தினுடைய பௌதீக முன்னேற்றம் 2023 திசெம்பர் 31 வரையும் பௌதீக முன்னேற்றமாக அதே 77.7 சதவீதமாக இருந்ததுடன் கிடைக்கப் பெற்ற தகவல்களின் பிரகாரம் இரண்டு மாத காலத்திற்காக எவ்வித முன்னேற்றமும் காட்டப்பட்டிருக்கவில்லை. | நியமிப்பதிலுள்ள தாமதம், ஊயுஉளீஊ திரு்மானத்தால் ஆலோசனை கொள்வனவு தாமதம்,<br><br>அணைககட்டு வடிவமைப்பு மற்றும்ஆயுளுடு மற்றும் ஏனைய காரணங்களால் நுஜயு அனுமதியில் தாமதம் |

**முகாமைத்துவத்தின் பதில்**

வதிவிட முகாம், விலகிய வீதி நிர்மாண வேலைகள் இதுவரை பூர்தியாக்கப்பட்டிருக்கவில்லை. தற்போது ஒப்பந்தகாரரின் நிதிப் பிரச்சனை காரணமாக வேலைத் தளத்தில் முன்னேற்றம் எதுவும் இருக்கவில்லை.

**கணக்காய்வாளின் பரிந்துரைகள்**

வேலைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைவதற்கு ஒப்பந்தகாரரை நெருக்கமாக கண்காணிக் வேண்டியதுடன் உயர் மட்ட பாதிப்புடன் நிதிப் பிரச்சனைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| (ii.) Lot B A2- பிரதான சிவில் வேலைகள் | 85.3% | 59.7% | ஒப்பந்தமானது 2019 ஒக்தோபர் 04 இல் வழங்கப்பட்டதுடன் 2023 செப்தெம்பர் 14 இல் பூர்த்தியாக்குவதற்கு ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்பட்டது. இரண்டு |

| | | | |
|---|---|---|---|
| | | | தடவைகள் கால நீடிப்பு (EOT) வழங்கப் பட்டிருந்ததுடன் கால நீடிப்பகளுடன் கடைசி பூர்த்தியாக்கல் திகதி 2024 யூலை 13 ஆக உள்ளது. |

**முகாமைத்துவத்தின் பதில்**

கோட்டை பாலம் உள்ளடங்கலாக ஒப்பந்தகாரருடைய முகாம் கட்டிடம், ஆய்வுகூடங்கள், அணைக்கட்டிற்கு தற்காலிக நுழைவு வீதி என்பவற்றின் நிர்மாணம் பூர்த்தியாக்கப்பட்டன. ஒருவேளை திசைமாற்ற சுரங்க பாதை நிறைவெற்றல், Adit -1, Adit -2, Adit – 3, தலைமை சுரங்கம், மதகு சுரங்கம், மின்நிலைய கட்டமைப்பு மற்றும் குள மேற்பரப்பு அகழ்தல் என்பன பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. தற்போது மின்நிலைய கட்டமைப்பு வெடித்தல், அணைக்கட்டு வெடித்தல், சுரங்க வழியின் சுவிச்யாட் வேலைகள் என்பன செயற்பாட்டில் உள்ளன.

**கணக்காய்வாளின் பரிந்துரைகள்**

வேலைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைவதற்கு ஒப்பந்தகாரரை நெருக்கமாக கண்காணிக் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| (iii). Lot B- எந்திர மற்றும் மின்னியல் வசதிகள் | 82.4% | 54.1% | ஒப்பந்தமானது 2020 மே 30 இல் வழங்கப்பட்டதுடன் 2023 நவம்பர் 30 இல் பூர்த்தியாக்குவதற்கு ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்பட்டது. ஒரு தடவை கால நீடிப்பு (EOT) வழங்கப் பட்டிருந்ததுடன் கால நீடிப்பகளுடன் கடைசி பூர்த்தியாக்கல் திகதி 2024 யூலை 13 ஆக உள்ளது. 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பௌதீக மன்னேற்றம் 54.1 சதவீதமாக இருந்தது. எதிர்பார்க்கப்பட்ட 82.4 சதவீத செயலற்றலுடன் குறிப்பிடத்தக்களவு விலகல் இருந்தது. 2024 மார்ச் 31 இல் உள்ளவாறு முன்னேற்றம் 61 சதவீதமாக இருந்தது. |

**முகாமைத்துவத்தின் பதில்**

நீர் மின்சார எந்திரவியல் மற்றும் மின்னியல் எந்திரம் தொடர்புபட்ட வடிவமைப்பு வேலைகள் செயற்பாட்டில் உள்ளது. ஒருவேளை மின்னிலையத்தில் சுழல் வழக்கு அலகு 1 இடல் மற்றும் 2 வரைவு ரியூப் எல்போ, மற்றும் சுழல் வழக்கு அலகு 1 மற்றும் 2 OHT கிறேன் என்பன பூர்த்தியாக்கப்பட்டது. மின்நிலைய விசைப்பொற, மின்பிறப்பாக்கிகள் மற்றும் உபபாகங்கள், ஸ்பிலவே கேற் உற்பத்தி வேலைகள் தொடர்ச்சியான பூர்த்தியாக்கப்ப்டிருந்ததுடன் வேலைத் தளத்திற்கு போக்குவரத்து வேலைகள் விரைவில் தொடங்கப்படும்.

**கணக்காய்வாளின் பரிந்துரைகள்**

வேலைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைவதற்கு ஒப்பந்தகாரரை நெருக்கமாக கண்காணிக் வேண்டும்.

### 3.2. ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளின் பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| கடன் உடன்படிக்கை மற்றும் கடன்வசதி நிர்வாக கைநூலின் அமுலாக்கல் பட்டியல் என்பவற்றின் பிரகாரம் செயற்திட்டமானது 2019 அளவில் பூர்த்தியாக்குவதற்கு எதிர் பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், ஆரம்ப பூர்த்தியாக்கல் திகதியிலிருந்து நான்கு ஆண்டுகளிற்கு மேல் கடந்திருந்த பொதிலும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொறக்கொல்ல நீர் மீன்சார செயற்திட்டத்தின் ஒட்டு மொத்த பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் முறையே 64 சதவீதம் மற்றும் 47 சதவீதமாக இருந்தது. மேலும் 2024 யூன் மாத்தில் உள்ளவாறு பௌதீக முன்னேற்றம் 73 சதவீதமாக இருந்தது. ADB மிசன் அறிக்கை பிரகாரம், வழங்கப்பட்ட கடன் காலப்பகுதிகளில் மேலும் நிடிப்பகள் எதுவும் இல்லாததுடன் கடன் முடிவுறுத்தலிற்கு பின்னர் செய்யப்பட்ட வேலைகளிற்காக மேலும் ஏதாவது நிதி உதவி மாற்றுவழி வளங்களிலிருந்து ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். இதன் விளைவால் தெளிவாக நுழைவதற்கு நிகழ்ச்சித்திட்டத்தின் ஒட்டுமொத்த இலக்குகள் மற்றும் நாட்டின் அவசர தேவையை கருதி 2014 மே 7 ஆந் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் சுத்தமான மின்சாரத்தை உற்பத்தி செய்வதன் மூலம் மின்சார வழங்கலின் நம்பகத்தன்மை எதிபார்க்கப்பட்டவாறு அமைய முடியாது. | 2024 யூன் மாதத்தில் செயற்திட்டத்தின் பௌதீக முன்னெற்றம் 75.2 சதவீதமாக இருந்ததுடன் 2024 யூலை 13 இன் கடன் முடிவுறுத்தல் திகதியில் உள்ளவாறு செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட பௌதீக முன்னேற்றம் 97.5 சதவீதமாக உள்ளது. | வேலைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைவதற்கு ஒப்பந்தகாரர்களை நெருக்கமாக கண்காணிக்க வேண்டும். |

### 3.3. குறைவாக பயன்படுத்தப்பட்ட வளங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளின் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | மீளாய்வாண்டிற்காக பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் சக்தி வினைத்திறன் முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (கட்டம் I) இன் ஒதுக்கீடு ரூபா 14,966 மில்லியாக இருந்ததுடன் அதில் ரூபா 7,740 மில்லியன் மாத்திரமே மீளாய்வாண்டின் போது பயன படுத்தப்பட்டிருந்தது. மேலும், கடன்வசதி நிர்வாக கைநுஸலின் பிரகாரம் அ.டொலர் 180 மில்லியாக (ADB மற்றும் AFD) நிதிகள்) இருந்ததுடன் அதில் அ.டொலர் 102.45 மில்லியன் (ஒதுக்கப்பட்ட நிதிகளில் 57 சதவீதம்) 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப் பட்டிருந்தது. ADB கடன் உடன்படிக்கை 2014 நவம்பர் | மேற்குறித்த பொதியில் நோக்கெல்லை காரணங்களை வழங்கல், கடன் திகதி காலாவதியாவதற்கு முன்னர் நிதிகளை முழுமையாக பயன்படுத்தல் சாத்தியமற்றிருந்தது. | வேலைகளை நிறை வேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைவதற்கு ஒப்பந்தகாரர்களை நெருக்கமாக கண்காணிக்க வேண்டும். |

20 இல் கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் 2015 பெப்ரவரி 02 இலேயே செயற் படுத்தப்பட்டது. கடன் உடன்படிக்கை செயற்பாட்டு திகதியிலிருந்து எட்டு ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் உடன்படிக்கை மூலம் ஒதுக்கப்பட்ட நிதிகள் 2024 யூலை 13 இன் கடன் முடிவுறுத்தல் திகதியில் முழுத் தொகையும் பயன் படுத்தப்படவில்லை. இதன் விளைவால் சுத்தமான மின்சாரத்தை உற்பத்தி செய்வதன் மூலம் மின்சார வழங்கலின் நம்பகத்தன்மை எதிபார்க்கப்பட்டவாறு அமைய முடியாது.

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கடன்வசதி நிர்வாக கைநூலின் பிரகாரம் விலைகூடிய படிம எரிபொருள் சக்தியில் தங்கியிருப்பதை குறைப்பதற்கு நாடு நீண்ட கால சவால்ககளில் உள்ளதுடன் கேள்வி வளர்ச்சி விலைகூடிய எரிபொருள் வெப்ப பொறி மூலம் செய்யப்பட்டது. எவ்வாறாயினும், எதிர்பார்த்த முன்னேற்றத்தை அடைந்திருக் காமையால் மேற்குறித்த விடயங்களை இந்த செயற்திட்டத்தின் பிரதான கூறுகள் கொண்டுள்ளது. கடன்வசதி நிர்வாக கைநூலின் பிரகாரம் பகுதி 1- நீர் விருத்திசெய்யப்பட்ட மின்சார உருவாக்கல் மற்றும் தொடர்புபட்ட உப மின்நிலையத்தின் மொத்த ஒதுக்கீடு ஐ.அ.டொலர் 128.53 மில்லியானாக இருந்ததுடன் அதில் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐ.அ.டொலர் 46.42 மில்லியனாக மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. | மொறக்கொல்ல நீர்மின்சார செயற்திட்டத்திற்கான கடன்வசதி நிர்வாக கைநூலின் பிரகாரம் ஒதுக்கீடு ஐ.அ.டொலர் 113.86 மில்லியனாக இருந்ததுடன் அதில் 2023 திசெம்பர் 31 வரையும் ஐ.அ.டொலர் 44.41 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. | வேலைகளை நிறை வேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைவதற்கு ஒப்பந்தகாரர்களை நெருக்கமாக கண்காணிக்க வேண்டும். |